**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement – 21A - ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) "பசுவைய்யா" என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர்?

A) பிரமிள் B) வண்ணநிலவன் C) சுந்தரராமசாமி D) கலாப்ரியா

2) பாரதிதாசன் "புரட்சிக்கவி" என்றும் "பாவேந்தர்" என்றும் அழைக்கப்படக் காரணம் யாது?

A) பாரதியாரை அடியொற்றி கவிதைகள் படைத்ததனால்

B) தமிழர் பற்றியும், விடுதலை உணர்வுகள் குறித்தும் பாடல்கள் இயற்றியதனால்

C) மொழி, இனம், குடியாட்சி உரிமைகளைத் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியதனால்

D) பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்ததனால்

3) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் நாடு காத்தற் சிறப்பையும் கொடைச்சிறப்பையும் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் புகழ்ந்துள்ளவர்?

A) குமட்டூர் கண்ணனார் B) பாலைக்கோதமனார்

C) காப்பியாற்றுக்காப்பியனார் D) பரணர்

4) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்?

A) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் B) அடையாறுப் பாலத்தின் சுவரில்

C) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் D) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

5) இருண்டகாலம் என்று ஆய்வாலர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டிய "களப்பிரர் காலத் தமிழகம்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) சி.வை. தாமோதரனார் B) இரா.பி. சேதுப்பிள்ளை

C) எஸ். வையாபுரியப்பிள்ளை D) மயிலை சீனி. வேங்கடசாமி

6) கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை "ஓதற்பிரிவு" என்று விளக்கும் இலக்கண நூல்?

A) தொல்காப்பியம் B) தண்டியலங்காரம்

C) நேமிநாதம் D) வெண்பா பாட்டியல்

7) கல்வி கற்பிக்கப்படும் இடங்களை கல்லூரி என்று குறிப்பிடுவது?

A) பெரிய திருமொழி B) திவாகர நிகண்டு C) சீவக சிந்தாமணி D) சிலப்பதிகாரம்

8) தமிழக திண்ணைப் பள்ளிக் கல்விமுறையைக் கண்டு வியந்து அம்முறையில் அமைந்த ஒரு பள்ளியை "மெட்ராஸ் காலேஜ்" என்னும் பெயரில் ஸ்காட்லாந்தில் நிறுவியவர் யார்?

A) சார்லஸ் உட்ஸ் B) தாமஸ் மன்றோ C) ரெவரெண்ட் பெல் D) சி.எஸ்.ஜான்

9) "கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும் / மூத்தோரை இல்லா அவைக்களனும் - பாத்துண்ணும் / தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும் நன்மை பயத்தல் இல்" என்னும் நூல்?

A) ஏலாதி B) திரிகடுகம்

C) சிறுபஞ்சமூலம் D) நாண்மணிக்கடிகை

ETW ACADEMY

**10)** பொற்கலம், பொற்சிலம்பு - இலக்கணக்குறிப்பு தருக.

A) ஆறாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

B) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

C) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

D) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

**11)** நற்றிணையின் அடிவரையரை?

A) 4 அடி சிற்றெல்லை; 40 அடி பேரெல்லை
B) 13 அடி சிற்றெல்லை; 31 அடி பேரெல்லை
C) 9 அடி சிற்றெல்லை; 12 அடி பேரெல்லை
D) 3 அடி சிற்றெல்லை; 6 அடி பேரெல்லை

**12)** இகக்கும் - சொற்பொருள் விளக்கம்?

A) காக்கும் B) நீக்கும் C) அழிக்கும் D) பழிக்கும்

**13)** தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை?

A) 9 B) 18 C) 3 D) 27

**14)** "ஊர்க் குறுமாக்கள் வெண்கோடு கழாஅலின் / நீர்த்துறை படியும் பெருங்களிறு போல / இனியை பெரும எமக்கே மற்றதன் / துன்னரும் கடாஅம் போல / இன்னாய் பெரும!நின் ஒன்னா தோர்க்கே" என்ற புறப்பாட்டில் யாருடைய வெற்றிப் புகழையும் வீரச் சிறப்பையும் யார் பாடுகிறார்?

A) பாரி, கபிலர்
B) அதியமான், ஔவையார்
C) கரிகாலன், வெண்ணிக்குயத்தியார்
D) குமணன், பெருஞ்சித்திரனார்

**15)** இறைச்சி என்பது வடமொழியினர் குறிப்பிடும் ____க்கு இணையானது.

A) தற்சமம்
B) உவசமம்
C) தொனி
D) மேற்கண்ட அனைத்தும்

**16)** சரியான விடையைத் தேர்க.

அ) கல்வி அழகே அழகு - 1. தொல்காப்பியம் சிறப்புப்பாயிர உரைப்பாடல்
ஆ) இளமையில் கல் - 2. திருமந்திரம்
இ) துணையாய் வருவது தூயநற் கல்வி - 3. ஆத்திசூடி
ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4. திருக்குறள்
- 5. நாலடியார்

A) அ - 2, ஆ - 3, இ - 4, ஈ - 1
B) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2
C) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1
D) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 5

**17)** "பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி பேணி வளர்த்திடும் ஈசன்" - என்று பாடியவர்?

A) பாரதியார் B) பாரதிதாசனார் C) கவிமணி D) நாமக்கல் கவிஞர்

**18)** "டைரியம்" என்னும் ______ சொல்லின் மூலமான "டைஸ்" என்ற சொல்லிலிருந்து டைரி (நாட்குறிப்பு) என்ற சொல் உருவானது

A) பிரெஞ்சு B) லத்தீன் C) கிரேக்கம் D) பாரசீகம்

ETW ACADEMY

**19)** பாபர் காலம் முதல் இருந்து வந்த நாட்குறிப்பு எழுதும் வழக்கம் யாருடைய காலத்தில் தடை செய்யப்பட்டது?

A) ஜஹாங்கீர் B) ஷாஜகான் C) ஔரங்கசீப் D) அக்பர்

**20)** "தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமனிக்கப்படுகின்றன" என்று ஆனந்தரங்கர் நாட்குறிப்புப் பற்றி கூறியவர்?

A) வ.வே.சு B) உ.வே.சா C) தி.க.சு D) திரு.வி.க

**21)** சீறாப்புராணத்தை இயற்றியவர்?

A) உமறுப்புலவர்
B) குணங்குடி மஸ்தான் சாகிப்
C) பனி அகமது மரைக்காயர்
D) அபுல்காசிம் மரைக்காயர்

**22)** கொண்மூ - என்றால் என்ன?

A) மலை B) காற்று C) மேகம் D) வானம்

**23)** வளைஇ, அசைஇ - என்பதன் இலக்கணக்குறிப்பு?

A) இன்னிசை அளபெடை
B) சொல்லிசை அளபெடை
C) செய்யுளிசை அளபெடை
D) ஈற்றுப்போலி

**24)** அகநானூற்றைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை?

A) 205 B) 5 C) 400 D) 145

**25)** சிறுபொழுதுகளில் பொருந்தாதது?

A) குறிஞ்சி - யாமம்
B) முல்லை - மாலை
C) மருதம் - காலை
D) பாலை - எற்பாடு

**26)** உரிப்பொருட்களில் பொருந்தாதது எது?

A) முல்லை - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
B) மருதம் - ஊடலும் ஊடல் நிமித்தமும்
C) நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
D) பாலை - சேர்தலும் சேர்தல் நிமித்தமும்

**27)** கருப்பொருட்களில் பொருந்தாதது?

A) குறிஞ்சி நில மக்கள் - பொருப்பன், கொடிச்சி
B) முல்லை நில மக்கள் - குறும்பொறை, நாடன், கிழத்தி
C) மருத நில மக்கள் - நுளையர், புலம்பன்
D) பாலை நில மக்கள் - விடலை, மீளி

**28)** புதுச்சேரியைச் சேர்ந்த எழுத்தாளர் பிரபஞ்சனின் இயற்பெயர் என்ன?

A) வைத்தியலிங்கம் B) சுப்புரத்தினம் C) கே.ஏ. குணசேகரன் D) தமிழ் ஒளி

**29)** காய் முன் நேர் ஒன்றி வருவது?

A) நேரொன்றாசிரியத் தளை
B) நிரையொன்றாசிரியத் தளை
C) இயன்சீர் வெண்டளை
D) வெண்சீர் வெண்டளை

ETW ACADEMY

30) பொருத்துக:

அ) நேரிசை ஆசிரியப்பா – i) முதலடியும் இறுதியடியும் அளவடிகளால் வரும்

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா – ii) அடிகளை மாற்றிப் பாடினாலும் ஓசயும் பொருளும் மாறாது

இ) நிலைமண்டில ஆசிரியப்பா – iii) ஈற்றயல் அடி சிந்தடியாய் வரும்

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா – iv) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்

A) அ - i ஆ - iii இ - iv ஈ - ii
B) அ - ii ஆ - iii இ - iv ஈ - i
C) அ – iii ஆ – i இ – iv ஈ – ii
D) அ - iv ஆ - iii இ - ii ஈ - i

31) டி.கே.சி யின் வீட்டுக் கூடத்தில் ஞாயிறுதோறும் கூடிய கூட்டத்தின் பெயர்?

A) பூந்தொட்டி B) இலக்கியத்தொட்டி C) எழுத்துத் தொட்டி D) வட்டத்தொட்டி

32) எந்தப் பொறுப்பைக் கொடுத்தாவது யாரைத் துணையாக்கிக்கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர்?

A) எதையும் சாதிப்பவரை
B) தோல்வியில் வருந்தாதவரை
C) முகக்குறிப்பில் அகக்குறிப்பை அறிபவரை
D) துன்பத்திற்கே துன்பம் தருபவரை

33) கேண்மை என்பதன் பொருள்?

A) நட்பு B) சுற்றம் C) படை D) கண்

34) ஒருவன் விளையாட்டாகக்கூட விரும்பக்கூடாத பண்பற்றது எது?

A) சினம் B) அச்சம் C) பகை D) நகை

35) வில்வீரரின் பகையைப் பெற்றாலும், யாருடையப் பகையைப் பெறக்கூடாதென திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A) வாய்ச்சொல் வீரரின் பகை
B) சொல்வன்மை உடையோரின் பகை
C) வலிமையுடையோரின் பகை
D) படை கொண்டோர் பகை

36) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் / வாய்நாடி வாய்ப்பச் சொல் - என்னும் குறளில் பயின்று வரும் அணி?

A) பொருள் பின்வருநிலையணி
B) சொற்பொருள் பின்வருநிலையணி
C) பிரிதுமொழிதல் அணி
D) தன்மையணி

37) பிறரிடம் கையேந்தி உயிர்வாழும் நிலை இருக்கும் எனில் அவ்வறே யாரும் அலைந்து கெடட்டும் என்கிறார் வள்ளுவர்?

A) அவர்களை பார்த்துப் பரிகசித்தவர்
B) அவர்களுக்கு கொடை செய்யாதவர்
C) அவர்களின் உலகத்தை உருவாக்கியவன்
D) மேற்கண்ட மூவரும்

38) தஞ்சை பெரியகோவிலின் கோபுரங்களில் உயரமானது?

A) மதுராந்தகன் கோபுரம்
B) ராசராசன் கோபுரம்
C) சிம்மேஸ்வர கோபுரம்
D) கேரளாந்தகன் கோபுரம்

ETW ACADEMY

**39)** கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்கு "கற்றளி" என்று பெயர். கற்றளி என்னும் வடிவத்தை முதலில் உருவாக்கியவர் மற்றும் உருவாக்கிய காலம்?

A) இராச இராச சோழன், 11ம் நூற்றாண்டு
B) இராசேந்திர சோழன், 11ம் நூற்றாண்டு
C) முதலாம் மகேந்திரவர்மன், 7ம் நூற்றாண்டு
D) இரண்டாம் நரசிம்மவர்மன், 7ஆம் நூற்றாண்டு

**40)** தஞ்சாவூர் பெரிய கோவிலில், பெரிய அளவில் வரையப்பட்ட ஓவியங்களில் சேராதது எது?

A) தட்சிணாமூர்த்தி ஓவியம் B) சுந்தரர் வரலாறு
C) தருமிக்கு சிவபெருமான் காட்சியளித்த காட்சி D) திரிபுராந்தகர் ஓவியம்

**41)** கோவில் எடுப்பித்தவர் பற்றிய கல்வெட்டில் இராச இராசன் தனக்கு அடுத்தப்படியான இடத்தை யாருக்கு அளித்திருந்தான்?

A) இராசேந்திர சோழன் B) குந்தவை நாச்சியார்
C) பெருந்தச்சன் D) ஒலோகமாதேவி

**42)** கவிஞர் ஆத்மாநாமின் இயற்பெயர்?

A) தர்மு. சிவராமு B) கல்யாணசுந்தரம் C) மதுசூதனன் D) ந. பிச்சமூர்த்தி

**43)** ஆத்மாநாம் நடத்திய சிற்றிதழ்?

A) ழ B) கவி C) எழுத்து D) கனவு

**44)** 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றான குறவஞ்சி, வேறு எவ்வாறு வழங்கப்படுகிறது?

A) குறவன் பாட்டு B) குறத்திப்பாட்டு
C) மலைகுறிஞ்சிப்பாட்டு D) குறிஞ்சிப்பாட்டு

**45)** குற்றாலக் குறவஞ்சி என்ற நூல், திரிகூட இராசப்பக் கவிராயரின் "_____" என்று போற்றப்படுவது?

A) கவிதைக் கடல் B) கவிதைக் கிரீடம்
C) கவிதை சாம்ராஜ்ஜியம் D) கவிதை அமுதம்

**46)** "சாழல்" என்பது?

A) பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு
B) ஒருத்தி வினா கேட்க மற்றொருத்தி இறைவன் செயல் பற்றிய உண்மைகளை விளக்குவது
C) சாழல் வடிவத்தை தமது பெரிய திருமொழியில் பயன்படுத்தியவர் திருமங்கையாழ்வார்
D) மேற்கண்ட அனைத்தும்

**47)** பன்னிரு திருமுறைகளில் திருவாசகம் பெறும் இடம்?

A) ஆறாம் திருமுறை B) ஒன்பதாம் திருமுறை
C) எட்டாம் திருமுறை D) பத்தாம் திருமுறை

ETW ACADEMY

**48)** திருவாசகத்தில் அமைந்துள்ள திருப்பதிகங்களின் எண்ணிக்கை & திருப்பதிகங்களுள் மொத்தம் எத்தனை பாடல்கள் அடங்கியுள்ளன?

A) 51 & 658 B) 21 & 388 C) 81 & 658 D) 101 & 388

**49)** மாணிக்கவாசகர் பற்றிய தகவல்களில் தவறானது எது?

A) சைவச் சமயக் குரவர் நால்வரில் ஒருவர்

B) திருவாதவூரைச் சேர்ந்தவர்

C) அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சராக இருந்தார்

D) திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசகரின் மற்றுமொரு நூல் தேவாரம்

**50)** கூற்று 1: தந்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ். கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.

கூற்று 2: அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள், ஃப்ரெஸ்கோ வகையைச் சார்ந்தவை

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு B) கூற்று இரண்டும் தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி D) இரண்டு கூற்றுகளும் சரி

**51)** சங்கரதாஸ் சுவாமிகளால் 1918 இல் "தத்துவ மீனலோசினி வித்துவ பால சபை" எங்கு உருவாக்கப்பட்டது?

A) திருச்சி B) மதுரை C) தஞ்சாவூர் D) இராமநாதபுரம்

**52)** "தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க / கொண்டல்கள் முழவின் எங்கள் தவளைகண் விழித்து நோக்க, / தெண்திரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின் / வண்டுகள் இனிது பால மருதம்வீற் றிருக்கும் மாதோ" என்னும் பாடலை இயற்றியவர்?

A) ஒட்டக்கூத்தர் B) தாயுமானவர்

C) திரிகூட ராசப்பக்கவிராயர் D) கம்பர்

**53)** "மருண்டனென்" - இலக்கணக்குறிப்பு தருக.

A) படர்க்கை பலர்பால் வினைமுற்று B) வினையாலனையும் பெயர்

C) முற்றெச்சம் D) தன்மை ஒருமை வினைமுற்று

**54)** பதிற்றுப்பத்து ____ மன்னர்கள் 10 பேரின் சிறப்புகளை எடுத்தியம்புகிறது.

A) சோழர் B) பாண்டியர் C) பல்லவர் D) சேரர்

**55)** "தேடுகல்வி இலாதோர் ஊரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல்" - என்று பாடியவர்?

A) பாரதியார் B) கவிமணி

C) பாரதிதாசன் D) நாமக்கல் கவிஞர்

**56)** பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் / மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என்றவர்?

A) நாமக்கல் கவிஞர் B) கவிமணி C) பாரதிதாசன் D) வாணிதாசன்

**57)** தமிழில் ஆக்கப்பெயர்கள் எதில் மிகுதியாகக் காணப்படுகிறது?

A) பேச்சு வழக்கு B) செய்யுள் வழக்கு

C) எழுத்து வழக்கு D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

58) பின்வரும் வரலாற்று நூல்களில் மயிலை சீனி. வேங்கடசாமியின் நூலில் சேராதது?

A) கொங்கு நாட்டு வரலாறு B) துளுவ நாட்டு வரலாறு

C) பிற்காலச் சோழர் வரலாறு D) மறைந்துபோன மருங்காப்பட்டினம்

59) அழிந்த வரலாறு, புதிய வெளிச்சம் - ஆகியவற்றின் இலக்கணக்குறிப்பு தருக:

A) வினையெச்சத் தொடர்கள் B) வினைமுற்றுத் தொடர்கள்

C) பெயரெச்சத் தொடர்கள் D) முற்றும்மைகள்

60) ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ள இலக்கண நூல்கள் எவை?

A) தொல்காப்பியம் & தண்டியலங்காரம் B) நன்னூல் & தண்டியலங்காரம்

C) வீரசோழியம் & நன்னூல் D) தொல்காப்பியம் & நன்னூல்

61) பட்டினிக்குரத்தி என்பவர் ___ என்னும் ஊரில் சமணப்பள்ளியொன்றை நிறுவியுள்ளார்.

A) வில்லியநல்லூர் B) விளாப்பாக்கம் C) பட்டினப்பாக்கம் D) நாகப்பட்டினம்

62) ஆசிரியாரால் சர்வ வல்லமையிலும் பாதிப்பை ஏற்படுத்த முடியும். வரால் ஏற்படப்போகும் நல்ல விளைவுகள் அவராலேயே மதிப்பிட இயலாது என்றவர் யார்?

A) தாமஸ் மன்றோ B) சார்லஸ் உட்ஸ் C) ஹண்டர் D) ஹென்றி ஆடம்ஸ்

63) "இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்" என்று போற்றப்படுவது?

A) தாமஸ் மன்றோ அறிக்கை B) மெக்காலே கல்வி அறிக்கை

C) ஹண்டர் கல்வி அறிக்கை D) சார்லஸ் உட்ஸ் அறிக்கை

64) விரிகதிர், ஒழுகுநீர் - இலக்கணக்குறிப்பு தருக.

A) பண்புத்தொகைகள்

B) வினைத்தொகைகள்

C) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

D) எண்ணும்மை

65) கடவுள் வாழ்த்து நீங்கலாக நற்றிணையில் உள்ளப் பாடல்களின் எண்ணிக்கை?

A) 500 B) 400 C) 401 D) 501

66) தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பழமையான உரையாசிரியர்களில் சேராதவர்?

A) நச்சினார்க்கினியர் B) கல்லாடனார் C) மணக்குடவர் D) தெய்வச்சிலையார்

67) லண்டன் பஞ்ச், இந்தி பஞ்ச் முதலிய கருத்துப்பட இதழ்களைக் கண்ட பாரதியார், தமிழில் நடத்த விரும்பிய கருத்துப்படங்கள் மட்டுமே கொண்ட இதழ்?

A) இந்தியா B) ஞானபாநு C) தர்மம் D) சித்திராவளி

68) உவமை நான்கு அடிப்படைகளில் தோன்றும் என்பதை, "வினை பயன் மெய் உரு என்ற நான்கே / வகைபெற வந்த உவமத் தோற்றம்" என்று குறிப்பிடும் நூல் எது?

A) வீரசோழியம் B) தண்டியலங்காரம் C) தொல்காப்பியம் D) நன்னூல்

ETW ACADEMY

69) கவிஞர் தாம் கூறிய கருத்தை வெளிப்படையாகக் கூறாமல் அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமப்படுத்துவது?

A) உருவகம் B) உள்ளுறை உவமம் C) இறைச்சி D) உவமை

70) "நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர் / பிடிபசி களைஇய பெருங்கை வேழம் / மென்சினை யாஅம் பொளிக்கும் / அன்பின தோழிஅவர் ஏன்ற ஆறே" - இப்பாடல் அடிகள் இடம்பெற்ற நூல் எது?

A) நற்றிணை B) குறுந்தொகை C) ஐங்குறுநூறு D) பதிற்றுப்பத்து

71) கீழ்காண்பனவற்றுள் 'இறைச்சி பற்றிய கூற்றைத் தேர்க

A) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

B) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்

C) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில்

D) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப்பொருள்

72) செந்தமிழ்ச் செம்மல் என்றழைக்கப்படுபவர்?

A) கால்டுவெல் B) வீரமாமுனிவர்

C) ஜி.யு.போப் D) சி.வை.தாமோதரனார்

73) "ஆல்வாரோ வெல்லோ" என்பவரால் யாருடைய நாட்குறிப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன?

A) வாசீப் B) வாஸ்கோடகாமா C) மெகஸ்தனிஸ் D) யுவான் சுவாங்

74) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் எத்தனை தொகுதிகளாக தமிழில் வெளிவந்துள்ளன?

A) 8 B) 10 C) 12 D) 15

75) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு அக்காலகட்டங்களில் எங்கு நடைபெற்ற பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது?

A) புதுவை B) தமிழகம்

C) தென்னிந்தியா D) மேற்கண்ட அனைத்தும்

76) ஆனந்தரங்கர் பதிவின்படி புதுச்சேரியிலிருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் பணியாற்றிய தமிழ் மாலுமி?

A) கண்ணப்பன் B) சுப்ரமணியன் C) சின்னசாமி D) அழகப்பன்

77) "உலகம்" என்னும் பொருள் தரும் சொல் எது?

A) பூரணம் B) புடவி C) கோன் D) துன்ன

78) "சீறத்" என்னும் அரபுச்சொல்லின் பொருள்?

A) முன்னேற்றம் B) வழித்தடம் C) வாழ்க்கை D) புராணம்

79) "ஐந்தும்" என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

A) உம்மைத்தொகை B) முற்றும்மை

C) எண்ணும்மை D) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

ETW ACADEMY

80) சீறாப்புரானத்தின் மூன்று காண்டங்களில் சேராதது?

A) விலாதத்துக் காண்டம்
B) நுபுவ்வத்துக் காண்டம்
C) ஹிஜிறத்துக் காண்டம்
D) அஸ்ரத்துக் காண்டம்

81) சீறாப்புராணத்திலுள்ள பாடல்கள் எத்தனை?

A) 3035
B) 5216
C) 4700
D) 5027

82) நபிகள் பெருமான் மீது "முதுமொழி மாலை" என்ற நூலை இயற்றியவர் யார்?

A) குணங்குடி மஸ்தான் சாகிபு
B) அபுல் காசிம் மரைக்காயர்
C) பனி அகமது மரைக்காயர்
D) உமறுப்புலவர்

83) அக நானூற்றுப் பாடல் வரிசைகளைக் கருத்தில் கொண்டு பொருந்தாததைத் தேர்க

A) பாலை - 1,3,5,7 ... என்ற வரிசையில் அமைந்துள்ளப் பாடல்கள்
B) குறிஞ்சி - 2,8,12,18 ... என்ற வரிசையில் அமைந்துள்ளப் பாடல்கள்
C) முல்லை - 4,14,24,34 ... என்ற வரிசையில் அமைந்துள்ளப் பாடல்கள்
D) நெய்தல் - 6,16,26,36 ... என்ற வரிசையில் அமைந்துள்ளப் பாடல்கள்

84) பாலை நிலத்திற்குரிய பெரும்பொழுதுகள் யாவை?

A) கூதிர், முன்பனி
B) கார்
C) ஆறு பெரும் பொழுதுகளும்
D) இளவேனில், முதுவேனில்

85) 1995இல் பிரபஞ்சனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற வரலாற்றுப் புதினம்?

A) கள்ளிக்காட்டு இதிகாசம்
B) வானம் வசப்படும்
C) சாய்வு நாற்காலி
D) அலையோசை

86) யாப்பு என்னும் கடலைக் கடக்க உதவும் நூலாக உள்ளது?

A) வீரசொழியம்
B) அமுதசாகரம்
C) யாப்பெருங்கலக் காரியை
D) தண்டியலங்காரம்

87) கலிப்பாவிற்கு உரிய ஓசை

A) செப்பலோசை
B) அகவலோசை
C) துள்ளலோசை
D) தூங்கலோசை

88) ஆசிரியப்பா பற்றிய தகவல்களில் தவறானதைச் சுட்டுக.

A) அகவல் ஓசை பெற்றதனால் அகவற்பா என்றழைப்பர்
B) இரண்டு அசைகளால் அமையும்
C) சங்ககாலத் தமிழில் ஆசிரியப்பாவாலான பாடல்கள் குறைவு
D) பா இயற்றுவதற்குரிய எளிய வடிவம்

89) டி.கே.சி எந்த நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்?

A) முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம்
B) மூவருலா, சிலப்பதிகாரம்
C) சிலப்பதிகாரம், மணிமேகலை
D) காக்கைப்பாடினியம், யாப்பெருங்கலக்காரியை

ETW ACADEMY

**90)** தஞ்சாவூர் பெரியகோவிலின் எதன் நிழல் கீழே விழும்?

A) கோபுரம் B) விமானம்

C) கோபுரம் & விமானம் D) எதன் நிழலும் விழாது

**91)** கோவில்களில் அமைக்கப்படும் இரண்டு நுழைவாயில் கோபுரங்கள் என்பது யாருடைய தனிச்சிறப்பு ஆகும்?

A) முற்கால சோழர்கள் B) பண்டைய சோழர்கள்

C) இடைக்கால சோழர்கள் D) பிற்கால சோழர்கள்

**92)** சோழன் செங்கணான் செங்கற்கள் கொண்டு எழுபத்தெட்டுக் கோவில்களைக் கட்டியிருப்பதாகத் தம் பதிகத்தில் குறிப்பிட்டவர்?

A) திருஞானசம்பந்தர் B) திருநாவுக்கரசர்

C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்

**93)** செங்கல், சுண்ணம், மரம், உலோகம் இல்லாமல் கோவில் கட்டியவன் மகேந்திரவர்மன் என்று குறிப்பிடும் கல்வெட்டு?

A) மண்டகப்பட்டு கல்வெட்டு B) குடுமியான்மலை கல்வெட்டு

C) மாங்குளம் கல்வெட்டு D) மாண்டசோர் கல்வெட்டு

**94)** "இராசசிம்மேச்சுரம்" என்றழைக்கப்படும் கோவில்?

A) தஞ்சாவூர் பெரிய கோவில் B) மாமல்லபுரம் கடற்கரை கோவில்

C) காஞ்சி கைலாசநாதர் கோவில் D) கங்கைகொண்ட சோழபுரம் கோவில்

**95)** நான்கு புறங்களில் நான்கு கோபுரங்கள் கட்டும் மரபு யாருடைய காலத்தில் துவங்கியது?

A) முதலாம் குலோத்துங்கன் B) முதலாம் பராந்தகன்

C) இரண்டாம் குலோத்துங்கன் D) இரண்டாம் பராந்தகன்

**96)** திரிகூட ராசப்பக் கவிராயர் பற்றிய தகவல்களில் தவறானது எது?

A) மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார் விருப்பத்திற்கிணங்க குற்றாலக் குறவஞ்சி இயற்றினார்

B) திருக்குற்றால நாதர் கோவில் வித்துவான் என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர்

C) குற்றாலநாதர் கோவிலில் பணிஉரியும் காலத்தில் சமண சமயக் கல்வியிலும் இலக்கணத்திலும் தேர்ச்சி பெற்றவர்

D) குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி ஆகிய நூல்களை பாடியவர்

**97)** திருவாசகத்தில் பாடப்பட்ட சிவத்தலங்களின் எண்ணிக்கை?

A) 36 B) 37 C) 38 D) 39

**98)** ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) புதிய சொற்கள் B) கலைச்சொற்கள்

C) சொற்பொருள் D) அறிஞ்சொற்பொருள்

ETW ACADEMY

99) அறிவியல் கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்வதன் முறைகள் பற்றி விளக்கியவர்?

A) வா.செ. குழந்தைசாமி B) பாவாணர்

C) பெருஞ்சித்திரனார் D) வீரமாமுனிவர்

100) சங்கரதாஸ் சுவாமிகள் உருவாக்கிய நாடகக் குழுவின் பெயர்?

A) சமரச சுத்த சன்மார்க்க சபை B) சமரச சன்மார்க்க சபை

C) சங்கரதாஸ் சன்மார்க்க சபை D) சன்மார்க்க சபை

101) நவீனத் தமிழ் எழுத்தாளரான சுந்தரராமசாமி எப்பகுதியைச் சேர்ந்தவர்?

A) கன்னியாகுமரி B) நாகர்கோவில் C) மதுரை D) சிவகங்கை

102) பின்வருவனவற்றுள் எது சுந்தரராமசாமியின் புதினம் இல்லை?

A) ஒரு புளிய மரத்தின் கதை B) ஸ்ரீரங்கத்து தேவதைகள்

C) ஜே.ஜே. சில குறிப்புகள் D) குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

103) ஓதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய - இலக்கணக்குறிப்பு தருக?

A) முற்றும்மை B) வியங்கோள் வினைமுற்று

C) வினைத்தொகை D) பண்புத்தொகை

104) தமிழ்க்கவிஞர் - இலக்கணக்குறிப்பு அறிக:

A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

B) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

C) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

D) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

105) ஆல்பர் காம்யுவின் அந்நியன் என்ற நூலும், காப்காவின் உருமாற்றம் என்ற நூலம் எந்த மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?

A) பிரெஞ்சு B) லத்தீன் C) ஜெர்மன் D) கிரேக்கம்

106) "உலகக் கவிதைகள்" தொகுப்பை தமிழில் அளித்தவர்?

A) ஏ.கே.ராமானுஜம் B) கன முத்தையா C) பிரம்மராஜன் D) ம.லெ.தங்கப்பா

107) பாரதிதாசன் ____ மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர் ஆவார்.

A) ஜெர்மானிய மொழி B) ரஷ்ய மொழி C) சீன மொழி D) பிரெஞ்சு

108) தமிழின் சிறப்பை உலகறியச் செய்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், யாரை வென்று, தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கினான்?

A) கலிங்கர்கள் B) காடவரையர் C) ஒன்பதின்மர் D) கடம்பர்கள்

109) "வண்ணந் தாமே நாலைந் தென்ப" என்றும், "ஒழுகு வண்ண மோசையி னொழுகும்" என்றும் "வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே" என்றும் குறிப்பிடும் இலக்கண நூல்?

A) தொல்காப்பியம் B) நன்னூல் C) தண்டியலங்காரம் D) யாப்பெருங்கலம்

**110)** "வீட்டிற்கோர் புத்தக சாலை வேண்டும்" - என்றவர் யார்?

A) பாரதிதாசன் B) மு.வரதராசனார்

C) அறிஞர் அண்ணா D) இரா.பி. சேதுப்பிள்ளை

**111)** அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார் யாரிடம் கூறியது?

A) அமைச்சர் கவிஞரிடம் B) மன்னன் அமைச்சரிடம்

C) அமைச்சர் மன்னனிடம் D) மன்னன் அமுதவல்லியிடம்

**112)** "சங்ககாலத் தமிழகத்தில் நாடெங்கும் தமிழே ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும், சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்று கருத்து தெரிவித்தவர்?

A) தேவநேயப்பாவணார் B) மறைமலையடிகள்

C) மா. இராசமாணிக்கனார் D) ச. அகத்தியலிங்கம்

**113)** சமணப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகளைப் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுகள் காணப்படுமிடங்கள்?

A) திருச்சி மலைக்கோட்டை & கழுகுமலை B) விராலிமலை & பழமுதிர்ச்சோலை

C) கழுகுமலை & கல்வராயன் மலை D) சித்தன்னவாசல் & எல்லோரா

**114)** திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப்புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம் உயர்நிலக் கல்விமுறையில் தமிழ் பயின்றவர்?

A) சி.வை.தாமோதரனார் B) ரா.பி.சேது

C) வீரமாமுனிவர் D) உ.வே.சாமிநாதர்

**115)** நற்றிணையைத் தொகுப்பித்தவன் யார்?

A) மதுரை உப்புரிகுடி கிழான் மகனாவான் உருத்திர சன்மன்

B) புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

C) பூரிக்கோ

D) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

**116)** பெண்களுக்காக எந்த இதழில் குறள் வெண்பா எழுதினார்?

A) யங் இந்தியா B) கர்மயோகி C) சக்கரவர்த்தினி D) இந்தியா

**117)** "இறைச்சியில் பிறக்கும் பொருளுமா ருளவே / திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே" என்று கூறும் நூல்?

A) நன்னூல்

B) தொல்காப்பியம்

C) யாப்பெருங்கலக்காரியை

D) காக்கைப்பாடினியம்

ETW ACADEMY

**118)** சாமுவேல் பெப்பிசு போலவே 06.09.1736 முதல் 11.01.1761 வரை ஆனந்தரங்கரும் நாட்குறிப்பு எழுதியதால் அவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

A) இந்தியாவின் பெப்பிசு B) ஆசியாவின் பெப்பிசு

C) பிரெஞ்சு கம்பெனியின் பெப்பிசு D) புதுவையின் பெப்பிசு

**119)** 1745 இல் புயலினாலும் கடல் சீற்றத்தாலும் மக்கள் பட்டினியில் வாடியபோது பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியவர் யாரென ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளார்?

A) விஜய ரகுநாத சேதுபதி B) தஞ்சை மன்னர்

C) கனகராயர் D) ஆற்காட்டார்

**120)** மறுவிலா - இலக்கணக்குறிப்பு தருக.

A) அடுக்குத்தொடர் B) வினைத்தொகை

C) ஈறுகெட்ட எதிமறைப் பெயரெச்சம் D) உருவகம்

**121)** சீறாப்புராணத்தை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இறந்ததால், அதன் தொடர்ச்சியானா சின்னசீறா என்ற நூலை இயற்றியவர்?

A) வண்ணக்களஞ்சியப் புலவர் B) அபுல் காசிம் மரைக்காயர்

C) பனி அகமது மரைக்காயர் D) குணங்குடி மஸ்தான் சாகிபு

**122)** அகநானூறுக்கு வழங்கப்படும் வேறுபெயர்?

A) நெடுந்தொகை நானூறு B) தமிழின் உபநிடதம் C) புறப்பாட்டு D) தமிழ் வேதம்

**123)** "சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப்போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதிவைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்" என்றவர் யார்?

A) வ.வே.சு B) உ.வே.சா C) தி.க.சு D) திரு.வி.க

**124)** இறுதி அடிக்கு முந்தைய அடி மூன்று சீர்களைப் பெற்றுவருவது

A) நேரிசை ஆசிரியப்பா B) இணைக்குறள் ஆசிரியப்பா

C) நிலைமண்டில ஆசிரியப்பா D) அடிமறி மண்டில ஆசிரியப்பா

**125)** உமறுப்புலவர் யாரால் ஆதரிக்கப்பட்டவர்?

A) சீதக்காதி B) அபுல்காசிம் மரைக்காயர் C) A & B D) பனி அகமது மரைக்காயர்

**126)** தஞ்சாவூர் பெரிய கோவில் பற்றிய செய்திகளில் தவறானது எது?

A) இந்தியாவிலுள்ள கற்றளிக் கோவில்களில் பெரியது, உயரமானது. எனவே இது பெரியகோவில் என்று அழைக்கப்படுகிறது

B) இராச இராசனால் ஆறு ஆண்டுகள் கட்டப்பட்டு 'தட்சிண மேரு' என்றழைக்கப்பட்டது

C) கருவறை விமானம் 15 தளங்கள் உடையது

D) கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது

**127)** தஞ்சாவூர் பெரியகோவிலின் 1000வது ஆண்டு நிறைவடைந்த ஆண்டு?

A) 2000 B) 2001 C) 2010 D) 2003

**128)** மூன்று வகை இந்தியக் கட்டடக்கலைப் பாணிகளில் சேராதது எது?

A) நாகரம் B) வேசரம் C) திராவிடம் D) கோதி

**129)** தஞ்சைப் பெரியகோவிலின் பெரிய நந்தியும் மண்டபமும் யார் காலத்தைச் சேர்ந்தவை?

A) நாயக்கர் B) முத்தரயர்

C) களப்பிரர் D) பிற்கால பாண்டியர்

**130)** புகழ்பெற்றக் கோவில்கள் பலவற்றிலும், எடுத்துக்காட்டாக, காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை போன்ற புகழ்ப்பெற்ற கோவில்களில் 150 அடிக்கு மேல் மிக உயரமான கோபுரங்களை கட்டியவர்கள்?

A) மௌரிய அரசு B) விஜயநகர அரசு

C) நாயக்கர் அரசு D) குஷாணப் பேரரசு

**131)** இராச இராசனின் பட்டத்தரசி ஒலோகமாதேவி கட்டிய "ஒலோகமாதேவீச்சுரம்" கோவில் எங்குள்ளது?

A) பழையனூர் B) உடையாளூர் C) தஞ்சை D) திருவையாறு

**132)** திருச்சாழல் வகையில் இறைவனைப் போற்றி, மாணிக்கவாசகர் எத்தனை பாடல்களைப் பாடியுள்ளார்?

A) 12 B) 18 C) 20 D) 24

**133)** சுந்தரராமசாமி மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த புதினங்கள்?

A) அன்னை வயல், ஜமீலா B) தாசியும் தபசியும், சித்தார்த்தா

C) இரட்டை மனிதன், இரு நகரங்களின் கதை D) செம்மீன், தோட்டியின் மகன்

**134)** "சேரதாண்டவம்" காப்பியத்தை இயற்றியவர்?

A) புலவர் குழந்தை B) முடியரசன் C) சுத்தானந்த பாரதி D) பாரதிதாசன்

**135)** பாரதிதாசனின் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற நூல்?

A) சக்தி வைத்தியம் B) சமுதாய வீதி

C) பிசிராந்தையார் D) வேங்கையின் மைந்தன்

**136)** புதுவை அரசு தமது தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக ஏற்றுக்கொண்ட பாரதிதாசனில் பாடல்?

A) தமிழுக்கு அமுதென்று பேர் B) வாழ்வினில் செம்மை செய்பவள் நீயே

C) புதியதோர் உலகம் செய்வோம் D) எங்கள் திருநாட்டில் எங்கள் நல்லாட்சியே

**137)** கைக்கிளைக்குப் புறனாக அமையும் திணை?

A) உழிஞைத்திணை B) தும்பைத்திணை C) பாடாண் திணை D) வாகைத்திணை

**138)** பொருந்தாப் பொருள் எது?

A) புரையோர் - வீழ்ந்தோர் B) யாணர் - புது வருவாய்

C) கடுந்துப்பு - மிகுவலிமை D) ஏமம் - பாதுகாப்பு

ETW ACADEMY

**139)** வினையடியுடன் எந்த ஆக்கப்பெயர் விகுதி சேர்ந்து புதிய சொற்களை உருவாக்குகின்றன?

A) ஆளர் B) ஆளி C) காரன் D) மானம்

**140)** 1980 இல் மயிலை சீனி. வேங்கடசாமிக்கு மதுரைப்பல்கலைக்கழகம் கொடுத்தப் பட்டம்?

A) தமிழ் வரலாற்றுச் செம்மல் B) தமிழ்ப் பேரவைச் செம்மல்

C) தமிழ் ஆராய்ச்சி செம்மல் D) தமிழ் இலக்கியச் செம்மல்

**141)** பின்வருவனவற்றுள் உட்பொருளைக் குறித்தவை எவை?

A) பொத்தகம், நூல் B) பொத்தகம், பனுவல், நூல்

C) சுவடி, பொத்தகம், நூல் D) நூல், பனுவல்

**142)** யாருடைய ஆணைக்கிணங்க சென்னை பொதுக்கல்வி வாரியம் 1826இல் தொடங்கப்பட்டது?

A) சார்லஸ் உட்ஸ் B) லார்ட் மெக்காலே

C) திரிமென் கீரே D) சர் தாமஸ் மன்றோ

**143)** இரா. மீனாட்சியின் கவிதை நூல்களில் சேராதது?

A) நெருஞ்சி B) சுடுபூக்கள்

C) உதய நகரிலிருந்து D) நீர் வளர் ஆம்பல்

**144)** நற்றிணையின் பேரெல்லை 12 அடியாக இருப்பினும் போதனார் பாடிய பாடல் விதிவிலக்காக எத்தனை அடிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது?

A) 9 B) 10 C) 11 D) 13

**145)** பாரதியார், கருத்துப்படங்களை வெளியிட்ட இதழ்கள்?

A) பாலபாரதம், சக்கரவர்த்தினி B) இந்தியா, விஜயா

C) சுதேசமித்திரன், சூர்யோதயம் D) கர்மயோகி, சுதேசமித்திரன்

**146)** சங்கப்பாடல்களில் பெரும்பாலும் இடம்பெறும் அணி?

A) சொற்பொருள் பின்வருநிலையணி B) தற்குறிப்பேற்ற அணி

C) உவமை அணி D) ஏகதேச உருவக அணி

**147)** ஜி.யு.போப் அவர்களின் _____ மற்றும் _____ ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

A) புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் B) சிலப்பதிகாரம், மணிமேகலை

C) நன்னூல், அமுதசாகரம் D) திருக்குறள், திருவாசகம்

**148)** ஆனந்தரங்கர் பற்றிய நூல்களில் சேராதது எது?

A) தியாகராய தேசிகரின் ஆனந்தரங்கன் கோவை

B) புலவரேறு அரிமதி தென்னகனின் ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ்

C) பிரபஞ்சனின் வானம் வசப்படும்

D) பிரபஞ்சனின் பிம்பம்

ETW ACADEMY

**149)** நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாறைக் கூறும் சீறாப்புராணத்தை யாருடைய வேண்டுகோளுக்கிணங்க உமறுப்புலவர் இயற்றினார்?

A) சடையப்ப வள்ளல் B) அபுல்காசிம் மரைக்காயர்

C) சீதக்காதி D) எட்டையபுர மன்னர்

**150)** "பா" இயற்றுவதற்குரிய எளிய வடிவமாகக் கருதப்படும் பா வகை எது?

A) வெண்பா B) ஆசிரியப்பா C) வஞ்சிப்பா D) கலிப்பா

**Reminder on Week 12 - Test Schedule**

1. ஞாயிறு அன்று காலை 6 மணிக்கு தமிழ் கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்.
2. ஞாயிறு மாலை 6 மணிக்கு தமிழ் Answer Key வெளியாகும்.
3. ஞாயிறு மாலை 6.30 க்கு இந்திய ஆட்சியியல் - Indian Polity கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்
4. திங்கள் காலை 6 மணிக்கு Polity Answer Key வெளியாகும்
5. திங்கள் காலை 6.30 மணிக்கு இந்திய வரலாறு - Indian History கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்.
6. திங்கள் மாலை 6.30க்கு History Answer Key வெளியாகும்.
7. தனித்தனியான மதிப்பெண் பட்டியல் வெளியிடப்படும்.

***

© ETW Academy

ETW ACADEMY